முருகப்பெருமான் துணை

முருகப்பெருமான் தலைமையில் உலகம் அனைத்தும் ஞானியர்களின் ஆட்சிக்கு உட்படும்.
இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக மனமுவந்து கைப்பட எழுதிய அருள்வாக்கு
இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும்.
துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**
**பாகம்: 740**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

08.10.2021, வெள்ளிக்கிழமை

1. கண்டேன் கலியுகத்தின் தர்மனை
கண்டேன் கருணைமிக்க ஞானியை
கொண்டேன் அரங்கனாய் அவனுள்ளே
குருபரன் யான் அவதாரம் கண்டுவிட்டேன்
2. விட்டபடி அரங்கனை தேடித்தேடி
விண்ணுலகோர் மேலும் வரம் தந்தருள
திட்டமிட்டு அரங்கனும் துவக்கிய
தெய்வநெறி சன்மார்க்க வழிகள் தன்னை
3. தன்னையே வானவர்கள் முன்மொழிந்து
தவமாக்கி உலகோர்க்கு அருளிவர
வருகின்ற இந்த அற்புதமான ஞானமாற்றம் வையகமெங்கும் சக்தியாக பரவும் காலம்
தருகின்றேன் மேலும் அரங்கனுக்கு வரமாக தரணியிலே ஞான அறிவுரை ஆசி தன்னை
4. தன்னையே சுப்ரமணியர் யானும் அருளுவேன்
தவசி அரங்கனுக்கு தர்மபலம்கூடியதோடு
அவனியில் அரங்கனோடு பல்வேறு ஞானியர் சக்தி
ஆற்றலாக இணைந்து ஆக்கம் தர
5. தருகவே அரங்கன் கொள்கை என்னும்
தவ தர்ம நெறி எங்கெல்லாம்
பெருமைபட உலகோரால் பின்பற்றப்பட்டு
பேருலகம் ஞானசக்தி பெறுவதாலே
6. ஆதலால் உலகமெங்கும் ஆறுமுகப்பெருமான்
அறிவிப்பேன் என்னாட்சி உதயமாகும்
பூதலம் ஞான ஆட்சி அடைவதோடு
புண்ணியங்கள் நிறைந்த பாதுகாப்பு மிக்க பூமியாக
7. ஆகவே அரங்கனால் உருவாக்கப்பட்டு
அகிலத்தார் அனைத்துபேரும் ஞானிகளாக
மிகைபட ஞானவழி தேர்வுகொண்டு
மேலான அரங்கன் வழிவழி அழியாமை பெற்று

8. பெற்றுமே கலியுகம் தன்பலத்தை
பிரம்மஞான சூட்சுமம் பெற்ற மக்கள் மூலம்
உற்றதொரு ஞானயுகமாற்றமாக
உருவெடுத்து உலகிலே ஞான ஆட்சி

9. ஞான ஆட்சி எந்தன் தலைமையிலே
நன்மை காண நடந்தேறும் சடுதிசடுதி
ஞானவான் அரங்கனுக்கு சத்தியவாக்காய்
நாட்டிவிட்டேன் ஞான அறிவுரை ஆசி வழி இதுகாலம்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–